# போகுது போ

துளிர்த்த இலை பழுத்து உதிருது
மீண்டும் துளிர்க்கும்
உதிரட்டும் போ;

நிறைந்த முழுநிலா தேய்ந்து மறையுது
மீண்டும் நிறையும்
மறையட்டும் போ;

நிரம்பிய ஏரி வறண்டு காயுது
மீண்டும் நிரம்பும்
காயட்டும் போ;

சேர்த்த செல்வம் காற்றாய்க் கரையுது
மீண்டும் சேரும்
கரையட்டும் போ;

கூடிய உறவு ஊடலில் பிரியுது
மீண்டும் கூடும்
பிரியட்டும் போ...

அ. ராஜா
சிகாகோ – டெல்லி
ஏர் இந்தியா பிளைட் AI 126
5 அக்டோபர் 2012.